RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2141

OPEN ACCESS

# திருவேங்கடத்தந்தாதி உணர்த்தும் சமயமும், பக்தி நெறியும்

அ. லதாமகேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீதேவிகுமரி மகளிர் கல்லூரி, கன்னியாகுமரி-629163, தமிழ்நாடு, இந்தியா.

# Religion and Devotional Ethics in Thiruvaenkadathanthathi

H. Latha Maheswari [a, *]

[a] Department of Tamil, Sri Devi Kumari Womens College, Kanyakumari-629163, Tamil Nadu, India

* Corresponding Author: lathamaheswari@gmail.com

Received: 19-08-2022
Revised: 03-10-2022
Accepted: 10-10-2022
Published: 15-11-2022

## ABSTRACT

Anthathi literature can be said to be a genre that arose due to the Yaapu form in minor literature. It is said that in Tamil overall 238 Anthathi verses are found. The Anthathi literature flourished and it helped in memorizing the devotional songs. So the period of Bhakti literature was the period when many Anthathis appeared. Among these, Thiruvaenkadathanthathi which was recited for the blessings of Thirumal, is a special one which is recited in the literary tradition. The purpose of this article is to examine the religious status and devotion recorded in this book.

**Keywords:** Ashtaprabandam, Tattvatrayam, Dhanumalayan, Prabhakti

## முன்னுரை

பிரபந்தத்தைச் சிற்றிலக்கியம் என்று கூறும் வழக்கு தமிழ் மக்களிடையே நிலை பெற்றுள்ளது. சிற்றிலக்கியங்களில் யாப்பு வடிவத்தின் காரணமாக உருவான வகையாக அந்தாதி இலக்கியத்தைக் கூறலாம். தமிழில் 238 அந்தாதி நூற்களில் பெயர்கள் கிடைத்துள்ளதாகக் கூறுவர். பக்திப்பாடல்கள் மனப்பாடம் செய்ய அந்தாதி இலக்கியம் ஏற்றதாக இருந்தது. எனவே பக்தி இலக்கிய காலமே அந்தாதி மிகுதியும் தோன்றிய காலமெனலாம். இதன்பின்னர் அந்தாதி இலக்கியம் பல்கி பெருகி வளர்ந்தன. இவற்றில் திருமாலின் அருள் வேண்டிப் பாடப்பெற்ற திருவேங்கடத்தந்தாதி சங்க இலக்கிய அகத்திணை மரபில் பாடப்பெற்ற சிறப்புடையதாகும். இந்நூலில் பதிவுபெற்றுள்ள சமயநிலையையும், பக்திநெறியையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அகத்திணை மரபில் இடம்பெறும் பக்திநெறி நீங்கலாக உள்ள பகுதிகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## அந்தாதியின் இலக்கணம்

அந்தாதி என்பது அந்தம், ஆதி என்னும் இரு சொற்களால் ஆன ஒரு வடமொழித் தொடராகும். ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவரும் செய்யுளில் முதலாக அமையும் படி அமைத்துப் பாடுவது அந்தாதியின் இலக்கணமாகும். இவ்வாறு மனனம் செய்வதற்கு எளிமையாக அந்தமும் ஆதியும் இணைத்துப்பாடினமையால் அந்தாதி எனப் பெயர்பெற்றது. ஆனால் பிற்காலத்தில் இது ஒரு இலக்கணக் கூறாக அமைந்து அந்தாதித் தொடை அமைவதற்கு ஏற்றவாறு அந்தாதி இலக்கிய வகைகள் தோன்றி வளர்ந்தன எனலாம்.

சங்க பாடல்கள் பலவற்றில் அந்தாதி இலக்கியக்கூறுகள் காணப்படினும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் முதன்முதலாக அந்தாதி இலக்கணத்தில் தனி இலக்கியம் படைத்தப் பெருமைக்குரியவராவர். அவர் பாடிய "அற்புதத் திருவந்தாதியே" முதலில் தோன்றி திருவந்தாதி இலக்கியம் எனும் பெருமையைப் பெற்றது.

கிபி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல் யாப்பெருங்கலக்காரிகை,

"அந்த முதலாத் தொடப்பதந்தாதி" (Amithasagarar, 1975)

என அந்தாதிக்கு இலக்கணம் கூறுகிறது. தண்டியலங்காரம்,

"செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" (Ramalingath Thambiran, 1971)

எனக் கூறுகிறது.

பா அமைப்பின் அடிப்படையிலும், பாடல் எண்ணிக்கை அடிப்படையிலும் அந்தாதிகள் தோன்றி வளர்ந்தன. சங்ககாலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம் ஆகிய காலங்களில் வாழ்ந்த புலவர்கள் அந்தாதி வகையில் பெரும்பான்மையான இலக்கியங்கள் படைத்தனர். கிடைத்துள்ள அந்தாதிகளில் பெரும்பாலானவை கடவுளைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. கிபி. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் அந்தாதி இலக்கியம் பல வகைகளில் தோன்றி வளர்ச்சிப் பெற்றுள்ளது.

## நூலாசிரியர்

திருவேங்கடத்தந்தாதி நூலாசிரியர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் "திவ்ய கவி" என்று அழைக்கப்பட்டவர். இவர் எழுதிய எட்டு நூல்களின் தொகுதியை "அஷ்டப் பிரபந்தம்" என்று கூறுவர். இவரது பாடல்கள் சொல், பொருள் நயம் பெற்று விளங்குவதுடன் தொடை நோக்கும் நடை சிறப்பும் கொண்டு மிளிர்வன. இவர் கி. பி 1623 முதல் கி. பி .1659 -வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் மன்னரின் அவையில் பணிபுரிந்தவர். இருமொழிப் புலமை பெற்றவர். நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற்குப் பிறகு இவர் எழுதிய அஷ்டப்பிரபந்த தொகுதியைத் "திவ்யப் பிரபந்தசாரம்" என்று அழைப்பர். இது வைணவ சமயத்தத்துவக் கோட்பாடுகள் நிறைந்த ஒரு பெட்டகமாகத் திகழ்கிறது.

## சமயநிலை

சமயம், மதம் என்பன ஒரு பொருள் குறித்த சொற்களாகும் "உலகச் சமய நூல்களில் தொன்மையானது ஆரியர் வருகையைத் தொடர்ந்து இந்நாட்டில் எழுந்த ரிக் வேதமே என்பர். (Ramakrishnan, 1979) வேதகாலத்திற்குப் பிறகுதான் சமயங்கள் வளர்ச்சி பெற்றன. பண்டைய இலக்கியங்கள் கடவுள் பற்றியும் வழிபாடுகள் குறித்தும் பேசுகின்றன. வடக்கிலிருந்து தமிழகத்தில் புகுந்த களப்பிரர்கள் பாண்டிய மன்னர்களை வெற்றி கொண்டு தம்முடைய சமயத்தையும் பண்பாட்டையும் புகுத்தினர். அவர்களுடைய சமயமாகிய சமணம் தமிழகத்தில் வேரூன்றியது. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் வரை நீடித்த அவர்களுடைய ஆட்சி தமிழகத்தில் நிலைபெற்றிருந்த வைதீகச் சமய நெறிகளையும் நம்பிக்கைகளையும் அழித்து விட்டது.

சங்க நூலில் பௌத்த முனிவரின் பாடல் உள்ளது என்றாலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு நூலாகக் கருதப்படும் மணிமேகலை காலத்திலே பௌத்தம் தமிழகத்தில் மிகவும் வேகமாகப் பரவியதாகத் தெரிகிறது. இக்காலகட்டத்தில் "ஆருகதம்" எனும் சைனமதமும் தமிழகத்தில் புகுந்தது. இதனால் கி.பி. 6- ஆம் நூற்றாண்டு வரை வைதீகச் சமயம் உயர்நிலையை அடைய முடியாமலேயே இருந்தது. 6 -ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு தான் வைதீகச் சமயமாகிய சைவம், வைணவம் மெல்ல மெல்ல உன்னத நிலையை அடையத் தொடங்கியது உலகிலே மிகவும் பழமையான உயிரோட்டமுள்ள சமயமாக சைவமும், வைணவமும் போற்றப்பட்டன.

## வைணவ சமயத்தின் வளர்ச்சிநிலை

முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் திருமாலுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றிய சமயம் வைணவ சமயமாகும். பரம்பொருள் ஒன்றே நாராயணனே பரதெய்வம் என்பதை ஸ்ரீ பராசர முனிவர் விஷ்ணுபுராணத்தில் நிலைநாட்டியுள்ளார். வைணவ மரபின் தோற்றக் கருத்துக்கள் ரிக் வேதத்தில் காணப்படுகின்றன. “விஷ்ணு” என்ற சொல்லின் பொருள் அனைத்தையும் பரவி நிற்றலாகும். விஷ்ணு ரிக் வேதத்தில் நலன்செய்தல், தூய்மை, ஏமாற்றப்படமுடியாத நிலை, பெருந்தன்மை, இரக்கம், விருப்பத்தை நிறைவேற்றுதல், ஆற்றல் அனைத்தையும் உள்ளடக்கியிருத்தல் போன்ற பண்புகள் உடையவராகக் குறிப்பிடப்படுகின்றார். (Narasimman, 1987) விஷ்ணுவை உயர்ந்த உண்மையெனக் கருதும் உபநிடதங்கள் வைணவ உபநிடதங்கள் என வழங்கப்படுகின்றன. உயிர்கள் அழியாதத் தன்மையினை உணர்கின்ற வீடுபேற்றிற்கு அன்பு அல்லது பக்தி வழியே சிறந்ததென வைணவ உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன.

இலக்கணநூலான தொல்காப்பியத்திலும் திருமால் பற்றிய செய்திகள் வருகின்றன. சங்க நூலான பரிபாடலில் திருமாலின் பெருமை பேசப்பட்டுள்ளது. சமண, பௌத்த இலக்கியமான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் திருமால் பற்றிய செய்திகளைக் காணலாம். எனவே வைணவ வழிபாட்டு மரபு சங்க காலத்திற்கு முன்பிருந்த தமிழகத்தில் வழக்கத்தில் இருந்ததை அறியலாம். இம்மரபு கி. பி 9-ம் நூற்றாண்டில் பல்லவ மன்னர்களின் பேராதரவாலும் நாத முனிகளின் உத்வேகத்தாலும் போற்றுதலாலும் எழுச்சிப்பெற்றது எனலாம். இக்காலச்சூழலில் திருமாலின் அடியவர்களான ஆழ்வார்கள் ஊர் ஊராகத் திருமால் கோவில்களுக்குச் சென்று போற்றிப்பாடி வைணவ சமயத்தைப் பரப்பினர். “ஆழ்வார்கள்” எனும் சொல் எம் பெருமானின் பண்பு நலன்களில் ஆழ்ந்து நிற்போர் எனப் பொருள் படுவதாகும். நாத முனிவரே “தத்வத்ரயம்” என்று கூறப்படும் ஜீவாத்மா, இயற்கை கடவுள் என்ற முப்பொருள்களை முதன்மையான உண்மைகளாக வகுத்தார். கடவுள் நாரயணனே என்பது நாதமுனிகள் கண்ட முடிவாகும்.

சைவமும், வைணமும் தொடக்ககாலத்தில் வேறுபாடு இல்லாது ஒரே கடவுள் ஒரே மதம் என்ற கொள்கை உடையதாகவே இருந்தன ஆதிகடவுளைச் சிவன் என்பர் சிவனடியார், திருமால் என்பர் திருமால் அன்பர். இருவருமே ஒருவர்தான் எனும் எண்ணமே மக்களிடம் நிலைத்திருந்தது.

முன்னோர்கள் “ஓர் உருவே மூவுருவாய் ஆன தென்பர். ஒரே உருவந்தான் மூன்றாகவும் முப்பதாகவும் முந்நூறாகவும் தோன்றுகிறது. இதை காளிதாசன்,

“ஏகைவ மூர்த்தி பிபிதே த்ரிதாஸர

ஸாமான்ய மோவுரம் ப்ரதமா வரத்வம்” (Nadaraja Sivam, 1982)

என்கிறார்.

“நான் சைவன்தான் சிவ பஞ்சாட்சர ஜபம் செய்கின்றவனாக இருந்தாலும் காயாம்பூ நிறத்து கோபிகர் ரமணனிடமே என்னுள்ளம் பாய்கிறது என்பார் லீலாசுகர். ஸ்ரீ அப்பைய தீ·ரோ மகேஸ்வரான சிவனுக்கும் ஜனார்த்தனனாகிய மகாவிஷ்ணுவுக்கும் இடையே துளியும் சேதமே இல்லையெனினும் என்னுடைய மனம் சந்திரனைச் சிரசில் சூடிய சிவபெருமானிடமே மிகுதியாக இலயிக்கிறது என்பார்.

சிவனாகிய சங்கரனும் திருமாலாகிய நாராயணனும் ஒன்றிணைந்து சங்கர நாராயணனாக (நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில்) சில ஆலயங்களில் காட்சிதருவதும் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் என்ற இடத்தில் உள்ள ஆலயத்தில் சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரும் இணைந்து தாணுமாலயனாக இருந்து அருள்பாலிப்பதும் இறைவன் பல உருவங்களில் காட்சிதந்தாலும் எல்லாம் ஒரு பரம்பொருளுக்குள் அடங்கும் எனும் இறை ஒருமைப்பாட்டை உணர்த்துவதை உணரலாம்.

இவ்வாறு முப்பெருந் தெய்வங்களையும் ஒன்றாக உணர்ந்து போற்றி வந்த மக்கள் பிற்காலத்தில் சைவம், வைணவம் என்ற பாகுபாட்டை ஏற்படுத்திக் கொண்டு சமயப் பூசல்களை ஏற்படுத்தித் தத்தம் சமயத்தை வளர்த்தமையை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன.

## திருவேங்கடத்தந்தாதி உணர்த்தும் சமயநிலை

பிள்ளைப் பெருமாளையங்கார் திருவேங்கடத்தந்தாதியில் திருமாலே முழுமுதற் கடவுள் என்பதை பல நிலைகளில் வலியுறுத்துவதோடு பிற தெய்வங்களைக் கீழானவர்கள் என்று இழிவுபடுத்துவதும் சமயக் காழ்ப்புணர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக உள்ளது.

திருமால் உலகளந்த காலத்தில் சத்திய லோகத்திற்குச் சென்று திருமாலின் திருவடிகளைப் பிரம்மன் தன் கைக் கமண்டல தீர்த்தத்தால் கழுவி விளக்க திருவடி தீர்த்தமாகப் பெருகிய கங்கா நதியைச் சிவபெருமான் தனது முடியில் ஏற்றுக்கொண்டு பூமியில் விட்டார் என்பது புராணவரலாறு இதை பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் உலக மக்களிடம் திரி மூர்த்திககளில் ஒரு மூர்த்தி திருவடியை நீட்ட, மற்றொரு மூர்த்தி அங்கு ஸ்ரீ பாத தீர்த்தம் சேர்க்க, வேறொரு மூர்த்தி அத்தீர்த்தத்தினைச் சிரமேற் கொண்டு புனிதனாயினார். இவர்களில் பெரியோன் யார்? நீங்களே ஆராய்ந்து அறிந்து சொல்லுங்கள் திருமாலையே உளம் உருகி வணங்குங்கள். உங்கள் துன்பங்கள் நீங்கி உய்தி பெறலாம் என்கிறார். இதை,

“வருமஞ்சனவன் ஒருவனையே உன்னி வாழ்த்துந் தொண்டீர்

கருமஞ்சனனங் களைந்து உய்ய வேண்டிற் கருத்திற்றெல்லாற்

தருமஞ்சன வெற்பன் தாள்தாமரை யைச்சது முகத்தோன்

திருமஞ்சனஞ் செய்புனல், காணும் ஈசன்சிரம் வைத்தாய்”

என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

திருமாலின் பாதங்கள் கழுவப்பட்ட நீரைத் தான் சிவபெருமான் தன் தலையில் தாங்கியுள்ளார் என்று சிவபெருமான் நிலையைத் தாழ்த்திக் கூறுகிறார். இதன் மூலம் திருமாலே மும்மூர்த்திகளில் உயர்ந்தவர் என்பதை ஆசிரியர் வலியுறுத்தியுள்ளமையை உணரலாம்.

பாணாசுரன் எனும் அசுரன் திருமாலுடன் போர் புரிய வந்தபோது முருகப்பெருமானும் அக்கினியும் துர்க்கையும் தோற்று ஓடப் பித்தனாகிய சிவனும் தான் எப்பொழுதும் பெண்ணை உடம்பில் உடையவன் என்று சொல்லிக்கொண்டு ஓடினான் என்பதை,

“கைத்தனுமோடு இசைவெற்பு எனக்காண வெவ்வாணனென்னும்

மத்தன்உமோடு இகல்செய் வானென்றே வந்து வையுறுவேல்

அத்தனுமோடியும் அங்கியும் ஒடஎன் அப்பனுக்குப்

பித்தனு மோடியும் அங்கத்து தான்னென்னும் பெண்ணனென்றே” (Pillaiperumal Aiyangar, 1906)

எனும் பாடல் உணர்த்தும். பாணாசுரனை எதிர்த்துப் பேராடுகின்ற கண்ணபிரான் தன்னை அழித்து விடுவாரோ என்ற அச்சத்தால் அவருக்கு(கண்ணபிரான்) இரக்கம் உண்டாவதன் பொருட்டு சிவபெருமான் “அங்கத்துத் தான் பெண்ணன்” என்று சொல்லிக் கொண்டு ஓடியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். “அங்கத்துத் தானென்னும் பெண்ணன்” எனும் தொடரில் உடம்பின் ஒருபாதியில் எப்பொழுதும் பெண் வடிவை உடையவன் என்ற பொருளைக் குறிக்கும் வகையில் இத்தொடரைக் கையாண்டுள்ளார் எனலாம்.

இப்பாடலின் வாயிலாக திருமாலே முதலானவர் முதன்மையானவர் என்பதை நிலைநாட்ட பிற தெய்வங்களைக் குறைவுபடுத்தி துச்சமாக மதிப்பிட்டுள்ளமையை உணரலாம்.

கண்டாகர்ணன் என்ற அசுரன் சிவபக்தியோடு இருந்தும் முக்திபெறாது கண்ணபிரான் அருளால் முக்திபெற்றான் என்ற புராண வரலாற்றைப் பிள்ளை பெருமாள் ஐயங்கார் திருவேங்கடத்தந்தாதியில்,

“ஞானம்கண்தா கனவொக்கும் பவந்துடை நஞ்சுவிருக்கும்

தானம்கண்டா கனற்சோதி என்யேத்து வல்தாலமுடன்

வானக்கண் தாகமும் வண்ணா என்றோதொலி வந்தடையா

ஈனம்கண்டா கனற்குஈந்தான் பரகதி என்னப்பனே" (Pillaiperumal Aiyangar, 1906)

எனக் கூறக் காணலாம். அதாவது, கனா தோற்றத்திற்கு ஒப்பான பிறப்பை எனக்கு ஒழித்து அருள்வாய்! என்று சிவபெருமானைத் துதித்தப்படி வானத்தில் தாவிச் செல்பவனும் திருமாலைத் துதித்துச் செல்லும் ஓசை தன் செவிகளில் நுழையாதப்படி திருமாலைப் பழிக்கும் இழிவுடையவனுமான கண்டாகர்ணன் எனும் அசுரனுக்குத் திருவேங்கடமுடையான் பரகதி தந்தருளினான் என்று கூறுவதன் மூலம் பகைவனுக்கும் அருள்புரியும் எம்பெருமானாகிய திருமால் சிவபெருமானைக் காட்டிலும் சிறந்தவர் என்பதை பதிவு செய்கிறார்.

மேலும் திருவேங்கடமலையில் இருந்து அருள் பாலிக்கும் திருமாலே மும்மூர்த்திகளிலும் முதன்மையானவர் ஒப்பற்றவர் என பல இடங்களில் வலியுறுத்தி பேசியுள்ளார்.

"பார் அளந்த

திருப்பதன் நன்தன் மதலை நிற்கும் திரு வேங்கடம் என்

பொருப்பு அனந்தல் தவிர்த்து உயிர்தொழ பொதுமின்" (Pillaiperumal Aiyangar, 1906)

என்றும்

"பூரணணாரணன் பொன்உலகு ஆளி புராரிகொடி

வாரணாரணன் வாழ்த்தும் பிரான் வடவேங்கடத்து" (Pillaiperumal Aiyangar, 1906)

"அரன்வேள் அயனார்முதல் தேவரெல்லாம்

சரண்துதிக்கும் படிமேனின்ற வேங்கடத் தாமத்தையே" (Pillaiperumal Aiyangar, 1906)

எனத் திருமாலே எல்லா கடவுளரும் துதித்து வழிபடக்கூடிய ஒப்பற்ற பெருமைக்குரியவர் என நூலாசிரியர் வலியுறுத்துகிறார்.

## பக்திநெறி

திருமாலின் பெருமையை எடுத்தியம்பும் திருவேங்கடத்தந்தாதியில் நூலாசிரியர் இறைவன் பால் செலுத்த வேண்டிய பக்தியினை வலியுறுத்துவதோடு, பக்தியால் அடையும் பயனையும் திறம்பட கூறியுள்ளார்.

இறைவனின் திருநாமத்தை மனத்தில் கொண்டு தியானித்து இறைவனை உணர்ந்து அவன்மேல் பாமாலை பாடி வழிபடுவது தான் பேரின்பம் இதை விட தேவேந்திர பதவியே கிடைத்தாலும் அது சிறந்ததல்ல சிற்றின்பத்தையே சாரும் என்பதை,

"தீங்குஅட மாலைக்கவி புனைந்தோம் இதிற்சீரியதே

யாங்கடம் மால்ஐயிர வதம்ஏறியிருக் கும்அதே" (Pillaiperumal Aiyangar, 1906)

என ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## திருவடிப்பெருமை

இறைவனது திருவடிகளை இடைவிடாது தியானஞ் செய்து கருமம் எல்லாம் விட்டுபோக அவனது கருணைக்கு ஆளாகிவிட்டேன். எனவே கருமத்தினால் வரும் வியாதிகளால் என்னை ஒன்றும் செய்து விட முடியாது என்று துணிவுடன் பிள்ளைப்பெருமாளையங்கார் நோய்களை விளித்து, நீங்கள் அகன்று போங்கள் என்று கூறுவதை,

"தூரவிரும்பும் புண்தரிக்கும் இக்காயத்தை சூழ்பிணிகாள்

நேரஅவிரும் புண்டரர்க்கு அருள்வான்நெடு வேங்கடத்தான்

ஈரவிரும்பும் புண்டரீகம் பொன்பாதங்கள் என்னுயிரைத்

தீரவிரும்பு உண்டநீராக்கும் ஆறுமுள்ளம் சேர்ந்தனவே" (Pillaiperumal Aiyangar, 1906) என்கிறார்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பில் நீரை வார்த்தால் அந்நீர் அவ்விரும்பால் ஈர்க்கப்பட்டு மீண்டும் வெளிப்படாது. அதுபோல் இறைவனின் திருவடிகள் என்னுயிரை ஈர்த்துக் கொள்ளுமாறு எம்மனத்தில் சேர்ந்திட்டான் என்னு மக்களுக்கு அறிவுறுத்தி இறைவன் மனதில் குடிகொண்டால் நோய்களாலும் பிற துன்பங்களாலும் நம்மை எதுவும் செய்யமுடியாது எனவே திருமாலின் திருவடியைத் தியானித்து மனதில் குடிவையுங்கள் என்று கூறுவதன் வாயிலாக இங்கு "பிரபக்தி" வலியுறுத்தப்படுகிறது.

## பக்தியினால் அடையும் பேறு

இறைவன் பால் பக்தி செலுத்துபவர்கள் அதன் பயனை உடனடியாக அனுபவிக்க முடியாவிட்டாலும் அவர்களது அந்திமா காலத்தில் அந்த பயனை அனுபவிக்க இறைவன் அருள்புரிவான் என்கிறார். அதாவது, பஞ்சைப் பாலில் நனைத்து வாயில் பிழிந்து விட்டபாலும் கண்டம் அடைத்ததனால் உள்ளே இரங்கிச் செல்லாது கடைவாயினின்று வழிய விக்கல் எடுக்கும் அந்திமா பொழுதில் அஞ்சாதேயென்று என்முன் எழுந்தருளி எனக்கு அருள்வாய் என்று வேண்டுவதால் இறைவன் மீது பக்தி செலுத்துகின்றவர்களுக்கு இறைவன் அவனது அந்திமாக் காலத்தில் துணைபுரிவான் என்ற கருத்தை எடுத்தியம்புகிறார் நூலாசிரியர். (Pillaiperumal Aiyangar, 1906) இது

"நாச்செத்து விக்குள்மேல் வாரா என் நல்வினை

மேற்சென்று செய்யப் படும்" (Periyannan, 2018)

எனும் குறளுடனும்

"பஞ்சு ஒழுக்கிய பால் வார்ந்து உக - பாலுண்

கடை வாய்படு முன்னே" (Ramanathapillai, 1967)

எனும் பட்டினத்துபிள்ளையின் பாடலுடனும் ஒப்பிடத்தக்கது.

இறைவனிடம் பக்தி செலுத்தி அவனது திருக்கலியான குணங்களில் ஈடுபட்டுத் துதிப்பவர் முக்தி அடைவர் இகழ்பவர் நரகம் அடைவர் என்பதை,

"மூதண்டத் தானத்து அவதரித் தானெனின் முத்திவினைத்

தீதண்டதான் அத்தனும் எடுத்தான் எனில்தீ நரகமே" (Pillaiperumal Aiyangar, 1906) எனக் குறிப்பிடுகிறார்.

மேலும், இரணியாசுரனை நரசிங்க மூர்த்தி அவதாரம் எடுத்து அழித்து வீழ்த்திய எம்பெருமான் உரைத்துள்ள திருவேங்கட மலையைச் சென்று அடைபவர்கள் தங்கள் ஊழ்வினை அகலப்பெறுவர் என்பதை,

"மருமந்திரங்கப் பிளந்தான் வடமலை வாரஞ் செல்லீர்

கருமம் திரண்டதை எத்தான் களையக் கருதுதிரே" (Pillaiperumal Aiyangar, 1906)

எனும் பாடல் அடிகளால் அறியலாம்.

## முடிவுரை

பிரபந்தங்களில் அந்தாதி இலக்கியம் தனித்துவம் வாயந்த ஒன்றாக திகழ்கிறது. பாடல்களை எளிதில் மனனம் செய்யும் நோக்குடனே அந்தாதி அமைப்பு பாடல்களை மிகுதியாக புலவர்கள் படைத்தனர். பெரும்பாலும் சமயம் சார்பாகவே அந்தாதி நூல்கள் தோன்றியுள்ளன.

திருவேங்கடத்தந்தாதி வைணவச்சமயச் சார்புடையது என்பதால் திருமாலின் புகழ் பாடும் ஒருவரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. வேதங்களில் விஷ்ணுவை (திருமால்) பற்றிய செய்திகள் உள்ளதால் வைணவ மரபுக் கால வரையறை செய்யமுடியாத அளவு மிகப்பழமையானது என்பதை உணரலாம். ஆழ்வார்கள் காலத்தில் சிவன், விஷ்ணு ஆகிய இரு தெய்வங்களையும் ஒன்றாகக் கருதிய சமயப் பொது நோக்கு இருந்தமையை அறியலாம். பிற்காலத்தில் மக்கள் பற்பல காரணங்களால் வேறுபாடுகளை ஏற்படுத்திக்கொண்டு சமயப் பூசல்களை உருவாக்கியமையைத் தெளியலாம். திருவேங்கடத்தந்தாதி தோன்றிய காலத்திலும் சமயப் பூசல்கள் நிலவியமையை நூலின் வழியாக அறிய முடிகிறது. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஒப்பற்ற கடவுள் நாராயணரே என்பதை வலியுறுத்த சில புராண நிகழ்வுகளைத் தனக்குச் சாதமாகப் பயன்படுத்தி நிரூபித்துள்ளார். பக்தியுடன் வழிபட்டால் இறையருளைப்பெறலாம். அருள்தன்மையால் இறைவன் நம் மனதில் குடிகொண்டு வழிநடத்துவான் என்றும் இறைவனுக்கு அடிமையாய் அவன் வசப்பட்டு அவன் அருளால் உய்வடைகின்ற “பிரபத்திநெறி “பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். திருவேங்கடமலையில் இருந்து அருள்பாலிக்கும் திருமாலின் சிறப்பும், வழிபடுவோர் அடையும் பயன்களும், திருமால் வழிபாடே முக்தியைத் தருவது என்ற அறிவுறுத்தலும் நூலில் இடம்பெற்றுள்ளன. அக்கால சமயக்காழ்ப்புணர்ச்சியை அறிவதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும்.

## References


Amithasagarar (1975) Ezhuthiya Yapparunkalakkaarigai, First Edition, Kalaga Veliyeedu, Chennai, India.

Nadaraja Sivam, (1982) Anthathikal kattum Samayaneri, Narmatha Pathippagam, Chennai, India.

Narasimman, P.R. (1987) Vainava Marabum Vadakum Therkum, Vishnu Pathippagam, Madurai, India.

Periyannan, (2018) Thirukural, Vanitha Pathippagam, Chennai, India.

Pillaiperumal Aiyangar, (1906) Thiruvaenkadathanthathi, G.S. Maniya and Companies, Thanjavur, India.

Ramakrishnan, S. (1979) Samaya Vazhvil Vadakkum Therkkum, New Century Book House Private Limited, Chennai, India.

Ramalingath Thambiran, K. (1971) Thandiyalangaram, Kalaga Veliyeedu, Madurai, India.

Ramanathapillai, P. (1967) Pattinathup Pillaiyin Thirupadalkal, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Tinnevelly, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License